பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 16 வெள்ளிக்கிழமை 30.05.2025 கதிர் 202

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரஸிற்கும் இடையே இன்று நடக்கவிருக்கும் சந்திப்பு குறித்து சமூக ஊடகங்களில் சிலர் கடும் எதிர்பார்ப்புக்களை எல்லாம் ☞ 2

# தேசபந்து மீதான விசாரணை ஜூன் 11இல் சாட்சியங்கள் பதிவு

### புதன்கிழமை அமர்வில் சூடான விவாதம்

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் மூன்று பேர் கொண்ட குழு, ஜூன் 11 சாட்சிகளைப் பதிவு செய்வதற்கு முடிவு செய்துள்ளது. அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு இந்தக் குழு மீண்டும் கூடவுள்ளது.

இந்த விசாரணைக் குழுவின் விசாரணை புதன்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றபோது தேசபந்து இரண்டாவது தடவையாகக் முற்பட்டிருந்தார். இந்த விசாரணையின்போது தேசபந்துவின் சட்டத்தரணிகள் முன்வைத்த கருத்தால் பல சமயங்களில் மிகச் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்திய கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி வழக்கறிஞர் திலீப பீரிஸ், பிரதிவாதி தேசபந்துவிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை முன்வைத்தபோது, தேசபந்து சார்பாக ஆஜரான வழக்கறிஞர் சஞ்சீவ சமரவிக்ரம, அவற்றில் பலவற்றை ஏற்கப் போவதில்லை என்று கூறினார்.

மாத்தறை வெலிகமவில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டபோது, பிரதிவாதியான தேசபந்துவும் சில தெளிவுபடுத்தல்களை ☞ 2

# தமிழ் அரசுக் கட்சிக்கு அடிபணிந்தால் அது சமஷ்டிக்கு இணங்குவதாக அர்த்தம்

### புது விளக்கம் கண்டுபிடித்த சரத் வீரசேகர

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் எதிர்ப்புக்கு ஆளும்தரப்பு அடிபணிந்தால் அது சமஷ்டியாட்சிக்கு இணக்கம் தெரிவித்ததாக அர்த்தப்படும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் 4 மாவட்டங்களில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளுக்கு உரிமை கோராதவிடத்து அவற்றை அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுவதாக அமைச்சரவை முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி நிர்ணய வர்த்தமானி அறிவித்தலை முழுமையாகச் செயற்படுத்தினால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் என்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள்.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் 2025.03.28 ஆம் திகதியன்று காணி திணைக்களத்தால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ☞ 8

# ஆளும்தரப்பின் செயற்பாட்டில் மக்களுக்குத் திருப்தியில்லை

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

என்.பி.பி. ஆளும்தரப்பு இதுவரையில் செய்தவற்றில் மக்களுக்குத் திருப்தியில்லை. அதன் பிரதிபலிப்பே உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தரப்புக்கு 2.3 மில்லியன் வாக்குகளின் வீழ்ச்சி என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியும் ☞ 2

### விமானப் பணிப் பெண்ணிடம்

# பாலியல் சேட்டையை விட்ட யாழ்ப்பாணவாசிக்கு மறியல்

எமிரேட்ஸ் விமானப் பணிப்பெண்ணை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் என்று கூறப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கப்பல் கேப்டன் ஒருவரை ஜூன் 5 வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதிவான் தனுஜா லக்மாலி நேற்று உத்தரவிட்டார்.

விமான நிலைய காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகசபாபதி குஷாந்தனே இவ்வாறு விளக்கமறியிலில் வைக்கப்பட்டார்.

துபாயில் இருந்து திரும்பும்போது தனது உடலைத் தொட்டு சந்தேகநபர் பாலியல் சேட்டை புரிந்தார் என்று ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த விமானப் பணிப் பெண் முறைப்பாடு செய்துள்ளார். சர்வதேச அளவில் அவதூறு ஏற்படுத்திய சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதால், சந்தேகநபரை விளக்கமறியலில் விமான நிலைய காவல்துறையினர் நீதிமன்றத்தில் கோரினர்.

காவல்துறையின் கோரிக்கையை ஏற்று சந்தேகநபரை விளக்கமறியலில் வைத்த நீதிவான், வழக்கை ஜூன் 5 மீண்டும் அழைக்க உத்தரவிட்டார். ☞ 2

# உள்ளாட்சி சபைகள் குறித்தே கஜேந்திரகுமாருடன் பேச்சு

### வேறு எதுபற்றியும் இல்லை என்கிறார் சுமந்திரன்



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமாருடன் இன்று மாலை நடக்கவிருக்கும் சந்திப்பில் உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து ஆட்சியமைப்பது குறித்து மட்டுமே பேசப்படும் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள தமிழ்க் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குவது என்று தமது தமிழ் தேசியப் பேரவை முடிவு செய்திருப்பதாக கஜேந்திரகுமார் அறிவித்திருந்தார். இதைத்தொடர்ந்து ☞ 2

# புதிய பயங்கரவாத சட்டம் இலங்கைக்கு அவசியம்

### நீதி அமைச்சர் வலியுறுத்து

நாட்டை பாதுகாப்பது ஆளும்தரப்பின் பொறுப்பு என்பதால் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற ஒன்று அவசியமாகும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பயங்கரவாத தடுப்பு (தற்காலிக விதிமுறைகள்) சட்டத்தை இரத்துச்செய்து புதிய சட்டம் ஒன்றை வரைவதற்கு ஏற்புடையதாக பொது மக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதன் கீழ், பல்வேறு அமைப்புகள் மற்றும் 240 பேர் இணைந்து தயாரித்து கைச்சாத்திட்டுள்ள யோசனைகள் அடங்கிய பிரேரணை ஒன்று நீதி மற்றும் தேசிய ஒரிமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் நேற்று நீதி அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டது.

அமைச்சர் அங்கு கருத்து தெரிவித்தபோது மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டம் ஒன்றை கொண்டுவருவதற்கு கடந்த ஆளும்தரப்பு பல குழுக்ககளை நியமித்தது. ஆனாலும் சட்ட ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இதுதொடர்பில் ஆளும்தரப்பினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவுக்கு கருத்துக்களையும் யோசனைகளையும் ☞ 2

# உள்ளாட்சி உறுப்பினர்கள் பட்டியலை வழங்க நள்ளிரவு வரையே அவகாசம்

உள்ளூராட்சித் தேர்தலுக்கான உறுப்பினர் பட்டியலைச் சமர்ப்பிக்க அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட நேரம் இன்று நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடைகிறது.

அதன்படி, இன்று நள்ளிரவுவரை பெறப்பட்ட உறுப்பினர்களின் பட்டியல்கள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன் பிறகு பெறப்படும் பட்டியல்கள் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

உறுப்பினர்களின் பட்டியல்கள் சமர்ப்பிப்பு குறித்து நாங்கள் விசாரித்தபோது, பட்டியல்கள் கணிசமான அளவில் பெறப்பட்டு வருவதாக ஆணையத்தின் தலைவர் கூறினார்.

இதற்கிடையில், உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக சில அரசியல் ☞ 2

# போலந்து அயலுறவு அமைச்சர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு

போலந்து குடியரசின் வெளியுறவு அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி, நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பில் நீண்ட கலந்துரையாடல்கள் நடைபெற்றன, மேலும் எதிர்காலத்தில் நாடு உலகளவில் எதிர்கொள்ளும் ☞ 8

# ஹெகலியவின் மகளிடமும் நேற்று வாக்குமூலம் பதிவு

முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகள் அமலி ரம்புக்வெல்லவிடம், லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு (ஸீணூயளீ), நேற்று கிட்டத்தட்ட 3 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்தது.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் தனிப்பட்ட ஊழியர்கள், சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு என்பவற்றை தானே பெற்றுக்கொண்டதன் மூலம் அரசிற்கு 8 மில்லியன் ரூபாய் இழப்பை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக, லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வெளியிட்டு வருகின்றனர். தமிழ் கட்சிகளின் ஒற்றுமைக்கு இது ஓர் அடிக்கல்லாக இருக்கும் என்றும்கூட எதிர்பார்ப்பு இருக்கிறது. ஆனால், அப்படியெல்லாம் பெரிதாக எதிர்பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை என்பதுதான் உண்மை.

இந்தச் சந்திப்பின்போது, உள்ளூராட்சி சபைகளில்ஆட்சியமைப்பதற்குஆதரவளிப்பது தொடர்பில் இரு கட்சிகளும் உருப்படியாக ஏதாவது பேசி ஒரு முடிவுக்கு வந்தால் அதுவே பெரிய விடயம்தான். இந்தச் சந்திப்பில் உள்ளாட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்து மட்டுமே பேசப் போகின்றோம் என தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். ஆனால், கொள்கை, கோட்பாடு, சமஷ்டி என்ற விடயங்களை அந்தப் பேச்சு மேசையில் கஜேந்திரகுமார் தூக்கிப் பிடிக்காமல் இருக்கமாட்டார்.

கிடைக்கும்சந்தர்ப்பத்தில்எல்லாம்தானும் தனது கட்சியும் மட்டுமே கொள்கைக்காக நிற்பவர்கள் மற்றைய அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் கொள்கையற்றவர்கள், குறிப்பாக மற்றைய தமிழ்க் கட்சிகள் தெற்கு ஆட்சியாளர்களின் அடிவருடிகள், அவர்களின் முகவர்கள் என்று நிரூபிப்பதற்கு ஏற்ற வகையில் அரசியல் செய்வதே கஜேந்திரகுமாரின் பாணி. ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியின் சந்திப்பில்கூட அவர் இதனைத்தான் தெரிவித்திருந்தார். முதலில் கொள்கை உடன்பாட்டை எட்டியபின்னர்தான் உள்ளாட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்துப் பேசலாம் என்பதுதான் அவரது கருத்தாக இருந்துள்ளது.

இந்தநிலையில்தமிழ்அரசுக்கட்சிதானாக வரும் இந்தச் சந்தரப்பத்திலும் கொள்கை கோட்பாடு என்கிற வகையில் எதையாவது தூக்கிப் பிடித்து அந்தக் கட்சியை அரசியல் பின்னடைவுக்குள்ளாக்கக்கூடியவகையிலான எதையாவது செய்யாமல் கஜேந்திரகுமார் இருக்கமாட்டார். தமிழ் அரசுக் கட்சி தரப்பிலோ, உள்ளாட்சி சபைகள் தவிர வேறு எதுபற்றியும் பேசப் போவதில்லை என்பதில் தெளிவாக இருக்கின்றனர். கஜேந்திரகுமார் கொள்கை, கோட்பாடு என்று ஏதாவது தொடங்கினாரானால், தமிழ் அரசுக் கட்சி கொள்கையோடுதான் இருக்கிறது, உங்கள் பாட்டன்தான் அப்படிச் செய்தார், இப்படிச் சொன்னார் என்று தொடங்கி கிழித்தெறிய சுமந்திரனும் தயங்க மாட்டார்.

ஆக மொத்தத்தில், இந்தப் பேச்சு பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்கிற அளவில் முடியாமல் இருந்தாலே மிகப் பெரிய வெற்றிதான்.

விசித்திரம் என்னவென்றால், வடக்கு கிழக்கில் அதிக ஆசனங்களைப் பெற்றுள்ள தமிழ்க் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிப்பது என்பதுதான் தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் ஆகியவற்றின் முடிவு. இதனை அந்த மூன்று கட்சிகளுமே பகிரங்கமாகவும்அறிவித்துவிட்டன. ஆனாலும் ஆட்சியமைப்பதற்கு இன்னும் இரு நாள்களே இருக்கும் நிலையிலும் இந்தக் கட்சிகளுக்கு இடையில்எந்தஇணக்கப்பாடும்இதுவரையில் இல்லைஎன்பதுதான்உள்ளார்ந்த உண்மை. மக்களுக்காக வெளியே ஒன்றைப்பேசுவதும், அதில் தங்களுக்கெல்லாம் இணக்கம் என்று மக்களை நம்ப வைப்பதும் பின்னால், தங்கள் தங்கள் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை (அஜெண்டா) முன்னெடுப்பதற்கு முழு மூச்சில் முயற்சிப்பதுமே இதற்கான காரணம். காலம் காலமாக இந்தக் கட்சிகள் இப்படித்தான் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றன.

உள்ளூராட்சிசபைகளில்ஆட்சியமைப்பது அதற்கான ஆகப் பிந்திய சாட்சியாகாமல் இருந்தால்அதுவேசிறந்தமுன்னேற்றம்தான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளாட்சி சபைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைச்சந்தித்துப்பேசுவதற்குநேரம்தருமாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் கஜேந்திரகுமாருடன் தொலைபேசியில் பேசியிருந்தார். அவரும் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசலாம் என்று தெரிவித்திருந்தார். எனினும் இந்தச் சந்திப்பில் என்ன விடயங்கள் குறித்துப் பேசப்படப்போகின்றது என்பது தனக்குத் தெரியாது என்று கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

இது பற்றி சுமந்திரனிடம் கேட்டபோது, உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்து மட்டுமே இந்தச் சந்திப்பில் பேசப் போகின்றோம். வேறு எதுபற்றியும் பேசப் போவதில்லை என்று தெரிவித்தார்.

''வடக்கு கிழக்கு சபைகளில் தமிழ் பேசும் கட்சிகள் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தால் அவை அந்தந்தச் சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஆதரவு தருவது என்று தமிழ் அரசுக் கட்சி ஏற்கனவே கொள்கை முடிவை எடுத்திருக்கிறது. அதுவும்போக, தமிழ் அரசுக் கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்துள்ள சபைகளில் தமிழ் அரசுக்கு நெருக்கமாக ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்க் கட்சியொன்று நாம் ஆட்சியமைக்க ஆதரவு தருமானால், அந்தக் கட்சிக்கு துணை மேயர் அல்லது உப தவிசாளர் பதவியைத் தராலாம் என்றும் ஒரு கொள்கை முடிவை எடுத்திருந்தோம்.

கஜேந்திரகுமாரின் அண்மைய அறிவிப்பு எமது கட்சியின் கொள்கை முடிவையொட்டி அமைந்திருப்பதால், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது குறித்-து அவருடன் பேசுவது மட்டுமே வெள்ளிக்கிழமை சந்திப்பின் நோக்கம். வேறு எந்த விடயங்கள் பற்றியும் இந்தச் சந்திப்பில் பேசப்போவதில்லை'' என்றார் சுமந்திரன்.

## தேசபந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினார்.

போதைப்பொருள் கடத்தல்காரரான நதுன் சிந்தக என்கிற ஹரக் கட்டாவின் தொலைபேசி பகுப்பாய்வு தரவுகள் மூலம் 149 நபர்கள் பற்றிய தகவல்கள் தெரியவந்ததை அடுத்து, பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது, கொழும்பு குற்றப்பிரிவின் அப்போதைய செயல் இயக்குநருக்கு அந்த 149 நபர்களைக் கைது செய்ய உத்தரவிட்டதாக தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இருப்பினும், இந்த உத்தரவு வழங்கப்பட்ட பிறகு கொழும்பு குற்றப்பிரிவின் எந்த அதிகாரிகள் குழு அனுப்பப்பட்டது என்பது தனக்குத் தெரியாது என்றும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப் பிறகு, அதாவது டிசெம்பர் 31, 2023 அன்று அதிகாலை 4 மணியளவில் அது குறித்து தனக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் தென்னக்கோன் கூறினார்.

இதற்கிடையில், இந்தக் குழுவை அனுப்பத் தேவையான வாகனம் சட்டத்தின்படி வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து விரட்டுவார்கள் என்பதை நான் நன்கு அறிவார் என்றும், பிரதம நீதியரசரை முறையற்ற வகையில் பதவி விலக்கிய நாடு இது என்றும் தேசபந்து தென்னகோன்தரப்புநியாயத்தைநாட்டுமக்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும்என்பதற்காகவே முயற்சிக்கிறோம் என்றும் தேசபந்து தென்னகோன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சஞ்சய வீரவிக்ரம அங்கு தெரிவித்தார். இதனால் அங்கு இரு தரப்பினருக்கும் இடையில் சூடான விவாதம் இடம்பெற்றது.

தேசபந்துவிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள 23 குற்றச்சாட்டுக்களில் பலவற்றை அவற்றை திருத்தம் செய்வதற்கு குழுவிடம் அனுமதி கோரி, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நெவில் டிசில்வாவை குழுவுக்கு அழையுங்கள். அவரிடம் தான் பல கேள்விகளை கேட்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

குழுவின் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பமானதை தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சஞ்சய வீரவிக்கிரம, நாடாளுமன்றத்தால் யோசனை நிறைவேற்றப்பட்டு, அதனூடான நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு விசாரணைகுழுவில் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக 23 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பலவிடயங்கள் உண்மைக்குப்புறம்பானவை மற்றும் விடய காரணிகளிலும் பல தவறுகள் காணப்படுகின்றன. ஆகவே அவை ஒவ்வொன்றாக திருத்தம் செய்யப்படவேண்டும் என்று குறிப்பிட்டு தமது தரப்பு திருத்த யோசனைகளை முன்வைத்தார்.

சட்டத்தரணி சஞ்சய வீரவிக்கிரம முன்வைத்த திருத்த யோசனைகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி திலிப பீரிஸ் எதிர்ப்பு தெரிவிக்காத நிலையில் முன்வைக்கப்பட்ட உத்தேச யோசகைகளை திருத்தம் செய்வதற்கு குழுவின் தலைவர் நீதியரசர் சூரசேன இணக்கம் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்துகருத்தைமுன்வைத்த சட்டத்தரணி சஞ்சய வீரவிக்ரம, எனது சேவை பெறுநர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. அரசியல் நோக்கங்களுக்காகவே இந்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த குற்றச்சாட்டுக்களில் 2023.12.31 ஆம் திகதியன்று மாத்தறை வெலிகம பகுதியை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பிரதானமாகப் பார்க்கப்படுகிறது. பதில் பொலிஸ்மா அதிபர் என்ற அடிப்படையில் தேசபந்து தென்னகோன் இந்த சுற்றவளைப்புக்கான உத்தரவை பிறப்பித்துள்ளார். அரசமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே பொலிஸ்மா அதிபர் இந்த உத்தரவை பிறப்பித்தார் என்றார்.

தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து விரட்டுவார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அதற்காகவே இந்தக் குற்றச்சாட்டுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பிரதம நீதியரசரை முறையற்ற வகையில் பதவி விலக்கிய நாடு இது. இருந்தாலும் தேசபந்து தென்னகோன் தரப்பு நியாயத்தை நாட்டு மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே முயற்சிக்கிறோம்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த சட்டத்தரணி சஞ்சய வீரவிக்ரம, எனது சேவை பெறுநரான பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் சாட்சியம் மறைக்கப்பட்டுள்ளது.

அந்த சாட்சியங்களை சத்தியபிரமாண கூற்று ஊடாக வழங்குவதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலிப பீரிஸ் கடந்த அமர்வின்போது குறிப்பிட்டார். ஆனால் இன்றுவரையில் அவர் சாட்சியங்களை வழங்கவில்லை. சாட்சியங்களை நான் பரிசீலனை செய்யாமல் எவ்வாறு எனது சேவை பெறுநர் தரப்பு நியாயத்தை எடுத்துரைக்க முடியும் - என்றார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுக்குமாறு நாங்கள் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை பொது மக்களுக்கு விடுத்திருந்தோம்.

உங்களால்வழங்கப்படும்யோசனைகளை சாதகமாக நாங்கள் ஏற்றுக்கொண்டு குறித்த குழுவுக்கு சமர்ப்பிப்போம். நாங்கள் மக்களுக்கு நல்லமுறையில் செவிசாய்க்கும் ஆளும்தரப்பினர். அதிகாரத்துக்கு வருவதற்காக நாங்கள்மக்களுக்குவழங்கியவாக்குறுதிகளை அவ்வாறே நிறைவேற்றுவோம். புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பில் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக்கொண்டு அறிக்கை ஒன்று தயாரிப்போம். அது தொடர்பாகவும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்கிறோம்.

இனவாதம் மதவாம் அல்லது வேறு விடயம் ஒன்றை காரணமாக்கிக்கொண்டு அடக்குமுறைக்கு பயன்படுத்துவதற்கு இந்தச் சட்டத்தை தயாரிப்பதில்லை. உலகளாவிய பயங்கரவாத சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு இவ்வாறான சட்டம் ஒன்று தேவையாகும்.

உலகில்வேறுநாடுகளில்பயங்கரவாதத்தை தடுப்பதற்கு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டங்கள் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற வகையில், அந்த நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நாட்டை பாதுகாப்பது ஆளும்தரப்பின் பொறுப்பு என்பதால் இவ்வாறான சட்டம் ஒன்று இருக்க வேண்டும் - என்றார்.

## தமிழ் அரசுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசியல்வாதிகள் சமூக கட்டமைப்பில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தி பெரும் எதிர்ப்பினை உருவாக்கினார்கள்.

பிரசுரிக்கப்பட்ட இந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறவேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தநிலையில், வர்த்தமானியை மீளப்பெறுவதாக ஆளும்தரப்பு குறிப்பிட்டுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் ஆளும்தரப்பின் தீர்மானத்துக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

1931ஆம் ஆண்டு இயற்றப்பட்ட காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நாட்டின் சகல மாகாணங்களிலும் உள்ள காணிகள் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் போர்ச்சூழல் மற்றும் ஏனைய காரணிகளால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண காணிகள் அளக்கப்படவில்லை.

பிரசுரிக்கப்பட்டுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளின்காணிகளைநிர்ணயம்செய்வதற்கு விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வடக்கு காணிகள் தமக்கு சொந்தம் என்று குறிப்பிடுபவர்கள் காணி உரித்து பத்திரங்களை மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இல்லையேல் குறித்த காணிகள் அரசுடமையாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமது காணி என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் அதற்கான ஆவணங்களைஉறுதிப்படுத்திக்கொள்ளலாம். இதில் என்ன பிரச்சினை உள்ளது.

நாட்டில் உள்ள சகல மாகாணங்களின் காணிகளும் நிர்ணயம் செய்யப்படும்போது ஏன் வடக்கு மாகாண காணிகள் நிர்ணயம் செய்யப்படக்கூடாது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் எதிர்ப்புக்கு ஆளும்தரப்பு அடிபணிந்தால் அது சமஷ்டியாட்சிக்கு இணக்கம் தெரிவித்ததாக அர்த்தப்படும். நாட்டை பிளவுப்படுத்தும் பிரிவினைவாதக் கொள்கையுடன் தான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி செயற்படுகிறது. பிரிவினைவாத கொள்கைக்காகவே போராடுகிறது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக செயற்படுத்தினால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் என்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிடுகிறார்கள்.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் இருந்து 25 ஆயிரம் சிங்களவர்களும், 15 ஆயிரம் முஸ்லிம்களும் 24மணிநேரத்துக்குள்பலவந்தமானமுறையில் வெளியேற்றப்பட்டார்கள். நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை வழங்குவதாயின் இவர்களின் பரம்பரையினரை வடக்கில் மீண்டும் குடியமர்த்த வேண்டும் - என்றார்.

## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் உறுப்பினர்களின்பட்டியல்களைத்தயாரிப்பதில் தாமதம்ஏற்பட்டுள்ளதாகஅரசியல்வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக தனது கருத்துக்களைத் தெரிவித்த ஆனந்த ரத்நாயக்க,

"பெறப்பட்ட உறுப்பினர்களின் பட்டியலை நாங்கள் வர்த்தமானியில் வெளியிடுவோம். அதுதான் தேர்தல் ஆணையத்தின் பங்கு. நாங்கள் அதைச் செய்கிறோம். சபைகளை நிறுவுவது அவர்களின் வேலை. அது ஆணையத்தின் வேலை அல்ல" என்றார்.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில்விக்கிரமசிங்க, புறக்கோட்டையிலுள்ள, கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு விழாவில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

உங்கள் அனைவருக்கும் நாங்கள் சிறப்பு பயிற்சி அளிப்போம். பிரதேச சபை உறுப்பினராகவும், கட்சி அமைப்பு விடயங்களிலும் பணியாற்ற நாங்கள் பயிற்சி அளிப்போம்.

இந்தத் தேர்தல் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களுக்குப் பிறகு நடைபெற்றது. இது ஒரு சிறப்புத் தேர்தல். வழக்கமாக, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்குப் பிறகு இதுபோன்ற தேர்தல் நடத்தப்படும்போது, அதிகாரத்தில் இருக்கும் ஆளும் கட்சி அதிக வாக்குகளைப் பெறுகிறது. ஆனால் இந்த முறை, அதற்கு மாறாகவும் நடந்தது.

இந்த ஆளும்தரப்பும் ஜனாதிபதியும் மீண்டும் ஒரு மக்கள் ஆணையை நாடினர். அவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட ஆணையைஉறுதிப்படுத்துமாறுஅவர்களிடம் கேட்கப்பட்டது. ஆனால் என்ன நடந்தது?

நாடாளுமன்றத் தேர்தலில் பெறப்பட்ட 6.8 மில்லியன் வாக்குகளின் எண்ணிக்கை 4.5 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. அதாவது 2.3 மில்லியன் மக்கள் ஆளும்தரப்பிற்கு பொருத்தமான சான்றிதழை வழங்கவில்லை.

அதாவது ஆளும்தரப்பு முதல் முறையாக வீழ்ந்தது. பொதுவாக, மக்களிடம் ஒரு ஆணையை நாடினால், அது வழங்கப் படவேண்டும். அது வழங்கப்படாவிட்டால், அது ஒரு பெரிய பின்னடைவு. அதாவது ஆளும்தரப்பு இதுவரை செய்தவற்றில் மக்கள் திருப்தி அடையவில்லை என்று அதற்குப் பொருள் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னார் மற்றும் செட் டிகுளம் மக்களின் நன்மை கருதி மல்வத்து ஓயாத் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார் மற்றும் செட்டிகுளம் மக்களின் நன்மை கருதி மல்வத்து ஓயாத் திட்டத்தை துரிதப்படுத்த ஜனாதிபதியிடம் யோசனை முன்வைத்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதிசெயலகத்தில்ஜனாதிபதிதலைமையில் நேற்று (வியாழக்கிழீழமை) இடம்பெற்ற கூட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்கா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற கூட்டத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு தேவையான முன்மொழிவுகளை வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டம் சார்ந்த முன்மொழிவுகளை முன்வைத்து இருந்தேன். இதன்போது,

அதனை நிறைவேற்ற வேண்டியதன் கட்டாயத்தையும் எடுத்துக் கூறியிருந்தேன். மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மற்றும் பாலம்பிட்டிக்கு இடையிலான பாதை தொடர்பாகவும் பேசியிருந்தேன். 12 கிலோ மீற்றர் வீதியில் இந்த வருடம் 2 கிலோ மீற்றர் போடப்படவுள்ளது. மிகுதி 10 கிலோ மீற்றர் வீதியை காபெற் இடுவதற்கு முன்மொழிந்து இருந்தேன். இந்தப் பகுதி மக்கள் தமது அரச சேவைகளை மேற்கொள்வதற்கு இந்த வீதி சீரின்மையால் மேலதிகமாக 70 கிலோ மீற்றர் தூரத்தில் பயணிக்க வேண்டியுள்ளது. அதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அடுத்த வருடம் நிதி ஒதுக்குவதாக கூறியிருந்தார்.

அதுமட்டுமன்றி, மன்னார் மாவட்டத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் ஆழ்துளை கிணறுகள் மூலமே குடிநீர் பெறப்படுகிறது. எதிர்வரும் காலங்களில் ஆழ்துளைக் கிணற்று தண்ணீர் உவர் நீராக மாற வாய்ப்புள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் தெரிவித்துள்ளனர். எனவே அதற்கு மாற்றீடாக ஏற்கனவே முன்மொழியப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற மல்வத்து ஓயாத் திட்டம் மந்த கதியில் உள்ளது. அதை விரைவுபடுத்த நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. அந்தத் திட்டத்தை மேற்கொள்ளும் போது முழுமையாக மன்னார் மாவட்டத்திற்கும், செட்டிகுளத்திற்கும் குடிநீரை வழங்க முடியும் என்பதுடன் லிவசாயத்தையும் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்திருந்தேன்.

மன்னார் மாவட்டத்தில் தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையில் பாதைச் சேவை இடம்பெற வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தி இருந்தேன். அதன் முக்கியத்தையும், அது தொடர்பாக இந்திய உயர் ஸ்தானிகர் கூறிய விடயத்தையும் கூறியிருந்தேன். இந்திய உயர் ஸ்தானிகர் இறங்குதுறை அமைக்குமாறு கோரினார். அதற்கான முன்மொழிவை சமர்ப்பித்தேன்.

மன்னார் தீவுப் பகுதி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படுகிறது. வடிகாலமைப்பு சீரில்லாது புகையிரத பாதைகள், வீதிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் பல மாதங்களாக பாதிக்கப்படுகிறார்ள். அதற்கு நிரந்த தீர்வை காண 198 மில்லியன் ரூபாய் தேவை என கூறியிருந்தேன். அது தொடர்பில் கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

வவுனியா மாவட்டத்தில் சிறிய, பெரிய குளங்கள் பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாது உள்ளன. இதனால் நீரினை தேக்கி வைக்க முடியாத நிலை உள்ளது. பல குளங்கள் முழுமையாக புனரமைக்கப்பட வேணடியுள்ளது. அதறகான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைத்திருந்தேன். வவுனியா மாவட்ட செயலக கட்டமானது 138 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதனை திருத்தி அமைக்க வேணடிய தேவைகள், அதனை நவீன மயப்படுத்த வேண்டிய தேவைகள் உள்ளன. அது தொடர்பான முன்மொழிவுகளை அரசாங்க அதிபர் என்னிடம் வழங்கியிருந்தார். அதனை நான் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பாலத்திற்கு இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மீண்டும் அதனை முழுமைப்படுத்த இன்னும் 1000 மில்லியன் ரூபா தேவை எனவும் கூறியிருந்தேன் . பாண்டியன்குளம், குத்துபாலம சிதைவடைந்து போக்குவரத்துக்கு ஆபத்தான நிலையில் உள்ளது. அதை புனரமைக்க 500 மில்லியன் ரூபா தேவை என கூறியிருந்தேன். அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

வங்கலை பிரதேசத்தில் விரைவான கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. அதை தடுக்க 23 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதனை முழுமைப்படுத்த மேலும் 23 மில்லியன் ரூபா உடனடியாக தேவை எனவும் கூறியிருந்தேன்.

வடக்கு மாகாணத்தில் பல வருடங்களாக இடமாற்றப் பிரச்சினை உள்ளது. குறிப்பாக வன்னி மாவட்டத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. பல ஆசிரியர்கள் யாழில் இருந்து வந்துள்ளார்கள். அவர்கள் 7,8 வருடம் முடிந்ததும் யாழ் செல்கிறார்கள். இதனால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இனிவரும் காலங்களில்









கோட்டா முறையில் அதனை மாவட்டங்களில் தெரிவு செய்ய வேண்டும் எனத் தெரிவித்தேன். பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த வேண்டும் எனவும் கூறியிருந்தேன் எனத் தெரிவித்தார்.

100

# வவுனியாவின் பல பகுதிகளிலும் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது

## மக்கள் அசௌகரியம்

வவுனியாவின் பல பகுதிகளிலும் அடிக்கடி இடம்பெறும் மின் தடையால் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) பல பகுதிகளிலும் அடிக்கடி மின் தடை ஏற்பட்டிருந்தது. இதனால் அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் என்பன பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டதுடன், மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

வவுனியாவில், வவுனியா நகரம், கடை வீதி, கற்குழி, வைரபுளியங்குளம், பண்டாரிக்குளம், மன்னார் வீதி, ஊக்குளாங்குளம், சூடுவெந்தபுலவு, இராசேந்திரங்குளம் உள்ளிட்ட பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டிருந்தது.

அதிலும், பல பகுதிகளில் எந்தவித முன்னறிவித்தலுமின்றி மின் தடை ஏற்பட்டதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 100

# கற்பிட்டி உச்சமுனை காட்டில் கைவிடப்பட்ட நிலையில் துப்பாக்கி ஒன்று இரு தோட்டாக்களுடன் கண்டுபிடிப்பு

(சியாஜ்)

கற்பிட்டி விஜய கடற்படையினரின் இரகசிய தகவலுக்கு அமைய கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.ஆர் லக்ஸ்மன் றன்வல ஆராச்சி தலைமையில் பண்டார ஆகியோர் மேற்கொண்ட தேடுதலில்கற்பிட்டி உச்சமுனை தேவாலயத்திற்கு பின்னால் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் கட்டு துப்பாக்கி ஒன்றும் பாவிக்கப்படாத ஒரு தோட்டாவும் அத்தோடு வெற்று தோட்டா ஒன்றும் புதன்கிழமை மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இத் துப்பாக்கி எந்த தேவைக்காக பயன்படுத்தப்பட்டது மனித கொலைக்காகவா அல்லது மிருக வேட்டைக்காகவா என்ற கோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கற்பிட்டி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காணி வர்த்தமானி அறிவித்தல் நாடகமா? மக்கள் சந்தேகத்திற்கு விளக்கம் வேண்டும்

**வடக்கு மாகாணத்தில் காணி உரிமைச் சிக்கல் என்பது தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையுடன் நேரடியாகத் தொடர்புடையது. இருபதாண்டுகால போர், அதனைத் தொடர்ந்து உருவான இடம்பெயர்ந்த நிலை, மற்றும் பிந்தைய இராணுவ ஆக்கிரமிப்புகள் எனப் பல அம்சங்கள் ஒன்று சேர்ந்து, காணி உரிமையை இன்று மிகவும் குழப்பமான, சிக்கலானதாக மாற்றி உள்ளன.**

**இந்த சூழலில், கடந்த பங்குனி மாதத்தில் 'காணி நிர்ணயச்-சட்டம்' எனப்படும் 1956ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ், மக்கள் தலைமுறையோடு தலைமுறையாக வைத்திருந்த நிலங்களை அரசுடமையாக்கும் வகையிலான வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. இந்த அறிவித்தல்கள், குறிப்பாக வடமராட்சி, வலிகாமம், முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் அதிக எதிர்ப்பை ஏற்படுத்தின. தமிழ் அரசியல் கட்சிகளும் இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டன. சட்ட மறுப்புப் போராட்டம், அரசுப் பணி முடக்கப் போராட்டம் என்பவற்றையும் அறிவித்திருந்தன. மக்கள் இதை அவர்களது உரிமைகளை அபகரிக்கும் நடவடிக்கையாகக் கண்டனர்.**

**இதையடுத்து, மக்கள் போராட்டங்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்டனங்களும் இடம்பெற்றன. சர்வதேச அளவிலும் விமர்சனங்கள் எழுந்தன. இதன் பின்னணியிலேயே கடந்த வார, அமைச்சரவையில் இந்த வர்த்தமானியை 'மீளப்பெறும்' முடிவு எடுக்கப்பட்டது என்பது அரசு தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டது.**

**ஆனால், அந்த தீர்மானம் தொடர்பான அதிகாரப்பூர்வ வர்த்தமானி அறிவித்தல் இன்னமும் வெளியிடப்படவில்லை. இதனால் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. 'ஆளும்தரப்புக்கு எதிரான அழுத்தத்தை சமாளிக்கும் அரசியல் உத்தியாகத்தான் இந்த அறிவிப்பு செய்யப்பட்டது' என்ற வாதம் வலுப்பெறுகிறது.**

**ஒரு அரசு அளிக்கும் உறுதிமொழி வார்த்தைகளில் மட்டுமல்ல, அதற்கான நடைமுறைச் செயற்பாடுகளிலும் வெளிப்படையாக அமைய வேண்டும். மக்கள் உரிமைகள் தொடர்பான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால், அதற்குரிய வர்த்தமானி அறிவித்தலும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அதேசமயம், இழுபறியான அணுகுமுறையும், சுமாரான செயல்பாடுகளும் ஆளும்தரப்பு மீதான நம்பிக்கையை முளைமுளையாகக் குறைக்கும்.**

**தமிழ்மக்கள் இந்த சந்தேகங்களைக் கொள்வதற்கான நியாயமான வாய்ப்புக்கள் உண்டு. ஏனெனில் கடந்த காலங்களில் கொழும்பு ஆளும் தரப்புக்களால் அவர்கள் பல தடவைகள் இவ்வாறு ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். இலங்கை பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுபட்ட கடந்த 70 வருடங்களாக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கியதே வரலாறு. இந்த காணி விடயத்திலும் அவ்வாறானதொரு அனுபவத்தை தமிழ் மக்கள் விரும்பவில்லை.**

**இந்த நிலைமை ஆளும்தரப்புக்கு எதிரான ஊழல், நம்பிக்கையற்றுப் போன நிர்வாகம் என்ற பழியையே மேலும் உறுதி செய்யும். தமிழ் மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவிரும்பும் ஆளும்தரப்பொன்று, முதன்மையாக செய்யவேண்டியது, இந்த வர்த்தமானியை உடனடியாக, அதிகாரப்பூர்வமாக மீளப்பெறும் செயலைத்தான்.**

**இது அரசியலுக்கு அப்பாலான மனித உரிமை விடயம் என்பது எண்ணத்தில் உறையட்டும்.**

# தும்புதடியும் விளக்குமாறும்

**என். சத்தியமூர்த்தி**




*தமிழ் மக்களின் காணி சுவிகரிப்பு குறித்த மார்ச் 28 வர்த்தமானி அறிவித்தலை அரசு திரும்பப் பெற்றுள்ளது. இந்தச் செய்திதான் தமிழர்கள் மத்தியில் முக்கிய பேசுபொருளாக இருந்திருக்க வேண்டும். அரசின் முடிவிற்கு தான் கொடுத்த அழுத்தம் மட்டுமே காரணம் என்று வெவ்வேறு தமிழ் தலைவர்கள் சொந்தம் கொண்டாடி இருந்தாலும், அது எதிர்பார்க்கக்கூடிய விடயமே. அவை குறித்த விவாதங்களும் ஆசிரியர் தலையங்களும் முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், நடந்தது என்ன?*

*வர்த்தமானி அறிவித்தலை அரசு பின்வாங்க தனது அழுத்தமே காரணம் என்று அதற்கு உரிமை கொண்டாடிய கஜேந்திரகுமார் அத்துடன் விட்டிருந்தால் பரவாயில்லை. குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறிய மற்றொரு விடயம் தான். தமிழ் மக்கள் அனைவரையுமே முகம் சுளிக்க வைத்துள்ளது.*

*எப்போதாவது நடைபெற இருக்கும் மாகாண சபை தேர்தலில் வடக்கில் கஜேந்திரகுமார் தரப்பினர் யாரை முதலமைச்சராகக் களம் இறக்குவார்கள் என்று கேள்வி கேட்ட பத்திரிகையாளரை குறை கூற முடியாது. என்ன, உள்ளாட்சி சபைகளின் தலைமை பதவி குறித்தே தமிழ் அரசியல் தலைமைகள் தங்களையும் தமது மக்களையும் குழப்பியடித்துக் கொண்டிருக்கும்போது இத்தகைய கேள்வி அவசியமா என்ற கேள்வி எழாமல் இல்லை. என்றாலும் அது தவறான விடயமல்ல.*

*ஆனால், அந்த கேள்விக்கு கஜேந்திரகுமார் அளித்த விடையே தவறானது. தவறான முன்னுதாரணமும்கூட. பிற கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர் என்று கருதப்படும் பெயர்களின் இடையே தாங்கள் ஒரு தும்புதடியை அந்தப் பதவிக்கு களமிறக்கலாம் என்று கஜேந்திரகுமார் கூறியது, ஆணவத்தின் குரல் மட்டுமல்ல. அரை வேக்காட்டுத்தனமானதும்கூட. அவரது அரசியல் பாரம்பரியத்தை வைத்து நோக்கும் போது, நிச்சயமாக ஏற்புடையதல்ல.*

*விடயம் வேறு ஒன்றுமில்லை. இன்றளவும் தமிழர் தரப்பில் முக்கிய கட்சியாகப் பவனி வரும் தமிழ் அரசு கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக சுமந்திரன் களம் இறங்குவார் என்ற செய்திக்கு பதில் அளிக்கும் முகமாகவே கஜேந்திரகுமார் இவ்வாறான பதிலைக் கூறி உள்ளார். சுமந்திரனைக் கொச்சைபடுத்துவதாக நினைத்துக்கொண்டு, தன்னையே அவர் கொச்சைபடுத்திக் கொண்டுள்ளார்.*

*நெத்தியடி*

*கஜேந்திரகுமார் இவ்வாறென்றால், அவருக்கு பதில் அளிப்பது போல் பேசியது சுமந்திரனோ அல்லது தமிழ் அரசு கட்சியில் இருந்து வேறு ஒரு தலைவரோ அல்ல. மாறாக, உள்ளாட்சி தேர்தலில் கஜேந்திரகுமாரின் தலைமையை ஏற்று ஒரே அணியில் நின்ற சிவாஜிலிங்கம்தான் கஜேந்திர குமாருக்கு நெத்தியடி போல், அதே லெவலுக்கு இறங்கிப் பதில் அளித்தார்.*

*அதாவது, முதலமைச்சர் என்பவர் தும்புதடி என்றால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன விளக்குமாறா, என்று சிவாஜி எழுப்பிய எதிர் கேள்வி, அதே ரகத்தை சார்ந்ததே. குறிப்பாக, கஜேந்திரகுமார் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக தொடரும் சூழலில், சிவாஜி யாரைக் குறிவைத்து தாக்கினார் என்பதில் ஐயம் இல்லை.*

*இது, இத்துடன் முடியப்போகிறதா, அல்லது அடுத்தடுத்த சுற்றுக்கள் ஊடாகப் பயணம் செய்யப் போகிறதா, என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். எது எப்படியோ, நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர், தமிழ் அரசியல் தலைமைகள் மீது பரிதாபம் கொண்டு, அவர்களுக்கு உள்ளாட்சி தேர்தலில் புத்துயிர் அளித்த வாக்காளர்களின் நம்பிக்கையை இவர்கள் போன்ற தலைவர்கள் சிதைத்து விட்டார்கள் என்பதே உண்மை.*

*இதே வகையில் தமிழ் அரசியல் தொடருமானால், காணி வர்த்தமானி பின்னெடுப்பு போன்ற எந்தவித முன்னெடுப்புகளும் இல்லாமலே தமிழ் மக்கள், அடுத்த சுற்றில், குறிப்பாக வடக்கு மாகாண சபை தேர்தலில் மீண்டும் ஆளும் ஜேவிபி- - என்பிபி பக்கம் சாய்ந்தால் ஆச்சரியப்படக்கூடாது. காரணம், இது போன்ற வார்த்தை பிரயோகங்கள் எல்லாம் மறைப்பது, தமிழ் தலைமைகளிடையே உள்ள மறுக்க முடியாத, மறைக்க முடியாத காழ்புணர்ச்சியை மட்டுமே.*

### ஜல்லிகட்டு மாடு

*இதற்கிடையில், சிவாஜிலிங்கமே, இன்று, வெள்ளிகிழமை, சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் சந்தித்துப் பேச இருக்கிறார்கள் என்று பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவித்துள்ளார். அதோடு நிற்காமல், அந்தச் சந்திப்பின் முடிவு நன்மை பயக்கதக்கதாக இருக்கவேண்டும் என்றும் எழுத்து வடிவில் முடியவேண்டும் என்றும்கூடக் கருத்துத் தெரிவித்துள்ளார்.*

*சிவாஜிலிங்கம் யாரும் அடக்க முடியாத, அடக்க முயலாக ஜல்லிகட்டு காளை. வழக்கமாக ஜல்லிகட்டு காளை மாடு போலவே, எப்போதாவதுதான் மக்கள் முன் தோன்றுவார். ஆனால், அடுத்த சந்திப்பு வரை மக்கள் தன்னை மறக்காதவாறு தடாலடி அரசியல் செய்து வருபவர். என்றாலும், அவர் எதிர்பார்க்கும் அளவிற்கு மக்கள் ஆதரவு கிடைக்கப் பெறாதவர்.*

*அந்த வகையில்தான், இனப்போர் முடிந்து நடந்த 2010 ஜனாதிபதி தேர்தலில் அவர் தமிழ் வேட்பாளர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு போட்டியிட்டார். அப்பொழுது அவர் சார்ந்திருந்த ரெலோ அங்கம் வகித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்கட்சி பொது வேட்பாளரான சரத் பொன்சேகாவை ஆதரித்தது.*

*அந்த தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்ட சிவாஜிலிங்கம்*

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# தும்புதடியும்.....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பத்தாயிரத்திற்கும் குறைவான வாக்குகளையே பெற்றார். அதோடு நின்றுவிடவில்லை. பின்னர் ஜனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட மஹிந்த ராஜபக்சதமிழ் தலைவர்களோடு நடத்திய முதல் சந்திப்பில், அவர் கூறியே தான் அந்தத் தேர்தலில் போட்டியிட்டார் எனவும் சேம்-சைட் கோல் அடித்தார்.

## திக்கு தெரியாத...

இந்தப்பின்புலம்கொண்ட சிவாஜிலிங்கம்கூறியதால்மட்டுமே, அல்லது கேட்டுக்கொண்டதால் மட்டுமே, சுமந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகிய இருவரும் சந்தித்து பேசிவிடுவார்களா? அவ்வாறு நடைபெற்றால், அதன் பின்னர் இருக்கும் சக்திகள் மற்றும் தலைமைகள் எது? இந்தக் கேள்விக்கான பதில்கள் தானாகவே பின்னர் வெளியாகும். ஆனால், தற்போதைய தேவை என்னவோ அது போன்ற ஒரு சந்திப்புத்தான்.

சுமந்திரனை பொறுத்தவரையில், இனப்போர் முடிந்த காலத்தில் காலம்சென்ற சம்மந்தன் அவரை அரசியலுக்கு வலுகட்டாயமாக இழுத்து வந்தார். அப்போது சம்மந்தனின் மனதில், சுமந்திரன் போன்ற சட்டம்- தெரிந்த. சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் சரளமாகப் பேசும் வேட்பாளரே வட மாகாண முதல்வராக வேண்டும் என்ற தெளிவான கருத்து இருந்தது.

இதுதான் வட மாகாண முதல்வருக்கான அளவுகோல் என்றால், தமிழர் அரசியலில் பழம் தின்று, கொட்டை போட்ட சம்மந்தனே அந்த பதவிக்கு உரித்தானவர்தான். ஆனால், கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சம்மந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட விரும்பவில்லை. முன்பு ஒரு முறை நாடாளுமன்ற தேர்தலில், கிழக்கில் இருந்து வந்த தன்னை வட மாகாண தமிழர்கள் தோற்கடித்ததின் வடு அவரது மனதில் இருந்து ஆறவில்லை என்றே அதனைக் கொள்ளவேண்டும்.

அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில், முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் தன்னை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிலை படுத்தி இருந்தார். கண்டியில் தொடங்கி, கொழும்பு தேசிய அரசியலில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டிருந்த அவருடைய முன்னுதாரணத்தை சம்மந்தன் தன்னுடைய விடயத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தப் பின்னணியில், சம்மந்தன் களம் இறக்கிய சுமந்திரனை அன்றில் இருந்தே, தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகித்த சுரேஷ் பிரேமசந்திரன் வகையாறாக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அப்பட்டமான உண்மை. அதன் காரணமாகவும்தான், சம்மந்தன், சுமந்திரனை தேசிய மற்றும் சர்வதேச அரசியலில் களத்தில் இறக்கிவிட்டு, அவரைப் போன்றே 'அனைத்து தகுதிகளையும்' பெற்றிருந்த நீதியரசர் விக்னேஸ்வரனை வட மாகாண முதல்வராகக் களமிறக்கினார்.

விக்னேஸ்வரன் மாபெரும் வெற்றிபெற்று முதல்வராக பொறுப்பேற்றாலும், 2013 தொடங்கி ஐந்து ஆண்டுகள் அவரது ஆட்சி திக்குதிசை தெரியாமல் அலைந்தது. தமிழ் மக்களுக்கு கிடைத்த மாபெரும் வாய்ப்பை விக்னேஸ்வரன் சொல்லி வைத்துத் தொலைத்தார். போதாததற்கு, சிவாஜிலிங்கம் வகையாறாக்களை போலவே 'கேலரி பாலிடிக்ஸ்' செய்து, தன் பங்கிற்கு, கூட்டமைப்பையும் உடைத்தார். தற்போது, எதுவுமே தெரியாத நல்ல பிள்ளையாக அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டதாக அறிவித்துவிட்டு, மீண்டும் தலைநகர் கொழும்புவில் ஐக்கியமாகிவிட்டார்.

## நெறியான அரசியல்

இந்தப் பின்னணியில், சென்ற வருட நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் 'நிராகரிக்கப்பட்ட' சுமந்திரன் முதலமைச்சர் பதவியைக் குறிவைப்பது எந்த வகையில் நெறியான அரசியலுக்கு வழி செய்யும் என்ற கேள்வி எழுகிறது. என்ன, ஒரு முறை நிராகரிக்கப்பட்டாலும், அவர் பின்வாசல் வழியாக தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் செல்ல முயலவில்லை. மாறாக, நேரடித் தேர்தலில் மீண்டும் மக்களின் ஆதரவை கோருகிறார். அது நியாயமன வழியே.

ஆனால். முன்பு போல் இல்லாமல் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற அணியே இல்லை. சுமந்திரன் சார்ந்த தமிழ் அரசு கட்சியும் பழைய வீச்சில் செயல்படவில்லை. தமிழர் தலைமைகள் மூன்று அணிகளாக உள்ளாட்சி தேர்தலில் களமிறங்கியது. இன்றுவரை அந்த நிலைமையே தொடருகிறது.



தமிழர் பகுதிகளில் உள்ளாட்சி தலைவர் பதவிகளுக்கு தமிழர் தலைமைகள் ஒருசேர பயணித்தால் மட்டுமே அந்தப் பதவிகளை அடைய முடியும் என்ற நிலையே தொடருகிறது. ஒரு விதத்தில், தமிழ் மக்கள், தங்களது சமகால எண்ணகிடக்கையையே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ஆனால், அதன் அடிநாதத்தை புரிந்து கொள்ளாமல், கஜேந்திரகுமார் போன்ற 'அறிவாளிகள்' செயல்படுவது மற்றும் வர்த்தைகள் மூலம் பிற தரப்புகளையே கொச்சைபடுத்துவது ஆகியவை எந்த நெறியில் சேர்த்தி என்பதையும் அவர்களே தெளிவுபடுத்தவேண்டும். காரணம், சுமந்திரனை மட்டுமே குறிவைத்தாலும், அவர் தமிழ் அரசு கட்சி என்ற இயக்கத்தின் பிரதிநிதியே என்பதை கஜேந்திரகுமார் போன்றோர் மறந்துவிடக்கூடாது.

அது போன்றே, சுமந்திரனை மட்டுமே குறி வைக்கிறேன் என்ற வகையில், கஜேந்திரகுமார் தமிழ் அரசு கட்சியில் மற்றொரு பிரிவிற்கு தலைமைத்துவம் நல்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனைக் குறிப்பாகப பாராட்டுவது எல்லாம், 'சீப்' அரசியல். இதுவும் மற்றொரு கட்சியின் உள்வீட்டு விவகாரங்களில் தலையிடுவதற்குச் சமம்.

சித்தன் போக்கு...

அதேசமயம், சுமந்திரனும், உள்ளாட்சித் தலைமைகள் குறித்து பிற தமிழ் அணிகளுடன் மேற்கொண்ட பேச்சுக்களின்போது, தமிழ் அரசு தரப்பில் வட மாகாண முதலமைச்சராகத் தான் களம் இறங்கும் சாத்தியக்கூறுகள் குறித்துப் பேசியது, அனாவசியமானது. அதற்கான கால-நேரம் வரும்போது, அதுவும் தனது கட்சியின் அரசியல் குழுவின் அனுமதியுடன் மட்டுமே அவர், பிற தமிழ் கட்சிகளுடன் நூல் விட்டு பார்த்திருக்கவேண்டும். அதுவரை பொறுமை காத்திருந்திருக்கவேண்டும்.

அதுபோன்றே. சொந்தக்காரணங்களுக்காகத் தான் வெளிநாடு செல்லும் முன், கிளிநொச்சி மாவட்ட உள்ளாட்சி அமைப்புகள் தலைமைத்துவ தேர்வில் 'லோக்கல் பாஸ்' என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறீதரனை வெட்டிவிட்டு அவர் அரசியல் செய்ய முயன்றதும் ஏற்றுக்கொள்ளும்படியாக இருக்கவில்லை. சிறீதரன் மட்டும் என்ன வாழந்தார்? அவர் தானே, தொடக்கம் முதலே சுமந்திரனை தோல்வி அடைய செய்வதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டார்!

இவைதானா, தமிழ் அரசியல் தலைமைகளை அரைகுறையாக நம்பி உள்ளாட்சி தேர்தலில் அவர்களுக்கு அரைகுறை ஆதரவை அளித்த மக்களுக்கு அவர்கள் அளிக்கும் பரிசு? இந்தப் பாதையிலேயே தலைவர்கள் பயணித்தால், தமிழ் மக்களும் 'சித்தன் போக்கு, சிவன் போக்கு' என்று மாகாண சபை தேர்தலில் தங்களது தற்போதைய நிபந்தனை ஆதரவைகூட மறுபரிசீலனை செய்யத் தயங்க மாட்டார்கள்.




காலைக்கதிர் Kalaikkathir

# தனித்தமிழர் வாழும் கல்லாற்றில் புத்தர் சிலையா? முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நடராஜா சீற்றம்.

(சகாதேவராஜா)



மட்டக்களப்பு மாவட்டத்தில் தனித் தமிழ் மக்கள் முழுமையாக வாழ்கின்ற கல்லாற்றில் புத்தர் சிலை தொடர்ந்து நிலைகொண்டிருப்பது முறையாகுமா? தேவையா? அது இனசௌயன்யத்தை நல்லிணக்கத்தை பாதிக்கலாம். எனவே அச்சிலை அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கைத்தமிழரசுக்கட்சியின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மா.நடராஜா தெரிவித்தார்.

அப்புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெரிய கல்லாற்று பாலத்தின் அருகே பிரதான வீதியில் ராணுவ சூழல் இருந்த காலகட்டத்திலே இந்த புத்தர் சிலை ஒரு தனியார்காணியில்வைக்கப்பட்டிருக்கின்றது .சின்னவத்தை பிரதேச பிக்கு ஒருவரினால் இந்த சிலை அடாத்தாக அந்த காணியிலேயே வைக்கப்பட்டதாக அறிகிறேன்.

அந்த காலகட்டத்திலே ராணுவம் போலீசார் ஆட்சி நிலவிய காலம் என்ற காரணத்தினால் பொதுமக்களாலோ ஏனைய அரசியல்வாதிகளாலோ எதுவும் செய்ய முடியாத ஜனநாயக மற்ற ஒருசூழ்நிலை இருந்தது .



ஆனால், இன்று சகல இன மக்களையும் அனுசரித்து சாதி இனமத பேதம் இல்லாமல் ஊழல் ஒழிப்போம் என்று வந்த அரசாங்கம் ஆட்சியில் உள்ளது.

எனவே முழுத் தமிழ் மக்கள் இந்துக்கள் கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற இந்த கல்லாற்றிலே அதுவும் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாக தனியார் காணியில் அடாத்தாக வைக்கப்பட்டது.

இன்று அங்கு எந்த பௌத்தரோ இல்லை. வணங்குவதற்குக்கூட யாருமில்லை.

இன்று அது அங்கு அவசியமா? என்ற கேள்வி எழுகின்றது. இது தொடர்பாக இந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் வாய்திறப்பதாகவும் இல்லை . எதற்கெல்லாமோ குரல் எழுப்புகிறார்கள். ஆனால் எமது உரிமையோடு இருப்போடு மண்ணோடு கூடிய இந்த விடயத்தை கண்டும் காணாமல் இருக்கிறார்கள். இதேபோல் உகந்தமலையிலும் புத்தர் சிலை முளைத்துள்ளது.

இந்துவாகப் பிறந்த புத்தபகவான் எந்த இடத்திலும் தன்னை கொண்டு இப்படி ஏனைய இன வேறிடத்தில் நிறுத்தி இன உறவை சீரழிக்குமாறு கூறவில்லை .உகந்த மலையில் இதே செயல்பாடு தான் தொடர்ந்திருக்கின்றது.

எனவே நல்லிணக்க அரசாங்கம் இதை கவனத்தில் கொண்டு இவ்வாறு தனித்தமிழர்கள்வாழ்கின்ற இடங்களில் இருக்கின்ற இந்த புத்தர் சிலைகளை அகற்ற வேண்டும் என்று அன்பாக வேண்டிக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

# யாழ்.கதிர்காம பாதயாத்திரீகர்கள் கல்லடி இராமகிருஷ்ண மடத்தில்

(சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ் கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் வியாழக்கிழமை 29 ஆவது நாளில் மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தை சென்றடைந்தனர்.

.யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மே மாதம் முதலாம் திகதிஸ்ரீ புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 29தினங்களில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களைக் கடந்து தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் நடுப்பகுதியில் உள்ளனர்.

நேற்று (வியாழக்கிழமை) பாதயாத்திரை குழுவினர் இராமகிருஷ்ண மிஷன் கல்லடி ஆச்சிரம பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீயின் அழைப்பில் அங்கு சென்றார்கள். அங்கு மணிமண்டபத்தில் தங்கி பகல் இராமகிருஷ்ண ஆலயத்தில் விசேட பஜனை ஆராதனையுடன் மதிய அன்னதானமும் இடம் பெற்றது.

அங்கு மணிமண்டப சிவபுரியில் பிற்பகலில் மருத்துவ முகாம் வழமைபோல் நடைபெற்றது. மாலை கல்லடி பேச்சியம்மன் ஆலயத்தில் தங்கினர்.

மழை வெயிலுக்கு மத்தியில் சுமார் 78 அடியார்கள் இதில் பங்கேற்றுள்ளனர். அவர்களில் சிலருக்கு காய்ச்சல் தடிமன் ஏற்பட்டுள்ளது. சிலருக்கு வெயில் கொடூரம் காரணமாக கால்கள் கொப்பளித்துமுள்ளது.

இவர்கள் அம்பிளாந்துறை பாதையூடாக வரலாற்று பிரசித்தி பெற்ற மண்டூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்று பின்னர் பெரிய கல்லாறு கடலாச்சி அம்மன் ஆலயத்தை சென்றடைவார்கள்.






# அல்முபஷ்ஷிறா பாலர் பாடசாலையில் வருடந்தம் நடத்தப்பட்ட சிறுவர் சந்தை

(ஜிப்ரான்)

மூதூர் அக்கரைச்சேனையில் இயங்கி வரும் அல்முபஷ்ஷிறா பாலர் பாடசாலையின் வருடாந்த சந்தை நேற்று (வியாழக்கிழமை) 9.00 மணியளவில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வானது அல் முபஷ்ஷிறா புதிய பாலர் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வானது பாலர் பாடசாலையின் தலைவர் ஆர்.சர்ராஜ் (எஸ் .எல்.பி.எஸ்) அவர்களின் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.



இதன் போது பிரதமே அதிதிகளாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஹில்மி அவர்களோடு மூதூர் பிரதேச சபை உறுப்பினர் எம்.சியான் (சுகாதார பணிமனை அதிகாரி), பிரதேச சபை உறுப்பினர் யூ.நிம்ஸாத் ஸலபி ஆகியோரோடு இணைந்து முன்னால் மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் ஜே.எம்.மாஹிர் மற்றும் சமூக சேவையாளர் கே.எம் மஹ்ரஸ ூன் ஹாஜி மற்றும் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# ஓட்டமாவடி பிரதேச சபைக்கு உறுப்பினராக அலி அன்சார்

(பர்ஸான்)



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்கு ஐக்கிய தேசிய கட்சி பட்டியல் உறுப்பினராக மீராவோடை மேற்கு வட்டாரத்தில் போட்டியிட்ட முகம்மட் முஸ்தபா அலி அன்சார் நேற்று (வியாழக்கிழமை) ஐக்கிய தேசிய கட்சி தலைமைக் காரியாலயத்தில் தலைவர் ரணில் விக்கரமசிங்கவிடம் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

# கற்பிட்டியில் டெங்கு ஒழிப்பு குறித்த கலந்துரையாடல்

(சியாஜ்)

கற்பிட்டியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் வியாழக்கிழமை கற்பிட்டி பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர், கற்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகள், கற்பிட்டி விஜயா கடற்படை பிரிவின் தளபதிகள், கற்பிட்டி கோட்டக் கல்வி பணிமனையின் அதிகாரிகள், கற்பிட்டி தள வைத்தியசாலை அதிகாரிகள், கற்பிட்டி பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இதில் கற்பிட்டி பிரதேசத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயாளர்கள் தொடர்பாகவும் பிரதேச மக்கள் தமது சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைப்பதற்கு மக்களுக்கான தெளிவூட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் எவ்வாறான முறைகளில் வழங்குவது மற்றும் பாடசாலை மட்டத்தில் எவ்வாறான விழிப்பூட்டல்களை மேற் கொள்வது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் அதற்கான செயல்திட்டங்களும் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.







# ‘உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்‘ திட்டம் சம்மாந்துறையில் தொடக்கம்

(சர்ஜுன் லாபீர்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு

‘உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்‘ எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான அடிக்கல் நடும் ஆரம்ப நிகழ்வு புதன்கிழமை கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.எம்.எம் அரபாதின் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எச்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் செந்நெல் கிராமத்தில் இடம்பெற்றது.





இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் சம்மாந்துறை உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜரங்கனி, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொறியிலாளர்கள், அதிகாரிகள், வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான ஏ.அபூவக்கர், எம் பிரிந்தா மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 63 ஆவது வயதில் உலக சாதனைகளை நிகழ்த்தும் சாவகச்சேரி முதியவர்

(சுபேசன்)

சாவகச்சேரி-மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 63வயதான செ.திருச்செல்வம் அண்மையில் மேலும் இரு உலகசாதனைகளை நிகழ்த்தி கலாமின் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

2540 கிலோகிராம் எடை கொண்ட இரண்டு வாகனங்களை ஒரே நேரத்தில் தனது காதுகளில் கட்டி 2நிமிடங்கள் 5செக்கன்களில் 100மீற்றர் தூரம் இழுத்து ஒரு சாதனையையும் - அதேநேரம் 1550கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை 5நிமிடங்கள் 30செக்கன்களில் 225மீற்றர் தூரம் இழுத்து மேலும் ஓர் உலக சாதனையையும் நிலைநாட்டியுள்ளார்.

மேற்படி உலக சாதனைகளை 30-04-2025 அன்று நிகழ்நிலையில் நிகழ்த்திய நிலையில் அதனை கலாமின் உலக சாதனை நிறுவனம் அங்கீகரித்து கடந்த 25-05-2025 ஞாயிற்றுக் கிழமை அவருக்கான உலக சாதனைச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்திருந்தது.

சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வானது சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

உலகசாதனையாளரானசெதிருச்செல்வம் தனது 60 ஆவது வயதின் பின்னர் தலைமுடி, தாடி, காது மற்றும் உடல் ஆகியவற்றின் உதவியோடு கனரக வாகனங்களை இழுத்து 5 தடவைகள் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் வௌ;வேறான உலக சாதனைகளைப் பதிவுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பல உலக சாதனைகளை நிகழ்த்தவிருப்பதாகவும் - இளைஞர்களுக்கு தான் ஓர் முன்மாதிரியாக இருக்க விரும்புவதாகவும் 7 உலக சாதனைகளுக்கு சொந்தக்காரனான செ.திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

## போலந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார சவால்களை சமாளிக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவு தேவை என்று ஜனாதிபதி கூறினார்.

அமெரிக்கா விதித்த புதிய கட்டண ஆட்சி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளுக்குள்செயல்படுவதில்இலங்கை எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்துடன் விரிவான முறையில் பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட ஜிஎஸ்பி பிளஸ் சலுகையைத் தொடர்வது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நேர்மறையான பதிலை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாராட்டினார்.

நிகழ்வில் பேசிய போலந்து வெளியுறவு அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி, தனது பயணம் ஐரோப்பிய ஒன்றியமும் போலந்தும் இலங்கைக்கு செலுத்தியுள்ள சிறப்பு கவனத்தை எடுத்துக்காட்டும் என்று கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவர் திருமதி கார்மென் மொரேனோ, ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் நந்திகா சனத் குமநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் திரு. ரோஷன் கமகே உள்ளிட்ட குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ஹெகலியவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு (ளீஞூயளீ) நடத்தி வரும் விசாரணைகளின் கீழ் கெஹலியவின் மகளிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் தனிப்பட்ட ஊழியர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளராக அமலி ரம்புக்வெல்ல செயல்பட்டார் என விசாரணை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, அமலி ரம்புக்வெல்லவின் சகோதரர் ரமித் ரம்புக்வெல்ல, லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவால் (CIBC) கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# யாழ். மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பெரும் அபிவிருத்தி வேலைத்திட்டம் குறித்த கலந்தாய்வு!

## அமைச்சர் சந்திரசேகரன் தலைமையில் நடந்தது

யாழ். மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளபாரியஅபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தை சகல வழிகளிலும் கட்டியெழுப்புவதற்கான மேற்படி வேலைத்திட்டத்துக்கு மீண்டெழும் அலைகளென தூரநோக்கை அடிப்படையாக கொண்டு செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டன. 2025 மற்றும் 2035 காலப்பகுதியை மையப்படுத்தியதாகவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.





யாழ். மாவட்டத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பாரிய அபிவிருத்தி திட்டங்கள் எவை, அவை எவ்வாறுமுன்னெடுக்கப்படும்,அதன்மூலம் மக்களுக்கும், நாட்டுக்கும் கிடைக்ககூடிய அனுகூலங்கள், உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில்அமைச்சருக்கு,நகர அபிவிருத்தி அதிகார சபையின் வட மாகாணத்திற்கான திணைக்கள அதிகாரிகளால் மேற்படி கலந்துரையாடலின்போது தெளிவுபடுத்தப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சுற்றாடல், சுற்றுலா உட்பட சகல விடயங்களுக்கும் மீண்டெழும் அலைகள் என்ற தூர நோக்கத்திற்குள் உள்வாங்கப்பட்டு, கட்டியெழுப்பப்படவுள்ளன. இதன்மூலம் யாழ்மாவட்டம்



மறுமலர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நகர அபிவிருத்தி சபை அதிகாரிகளின் திட்டத்தை கண்காணித்த பின்னர், தமது தரப்பிலுள்ள யோசனைகளையும் அமைச்சர்முன்வைத்தார். வளமானதொரு யாழ்மாவட்டத்தைகட்டியெழுப்புவதற்கு இத்திட்டம் பக்கபலமாக இருக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேற்படி சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ஸ்ரீபவானந்தராஜா, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின்இணைப்பாளர்ஸ்ரீவாகீசன், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும், முன்னாள்விரிவுரையாளருமானசுகபிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# யாழ்ப்பாணத்துச் சைவர்களுக்கு நெருக்கமான தலமான திருப்புகலூரில் மகா கும்பாபிஷேகம்

திருப்புகலூர் திருத்தலம் தமிழ்நாட்டில் மயிலாடுதுறையிலிருந்து தெற்கே 33 கிலோ மீற்றர் தொலைவில், நாகபட்டினம் மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற தலம்.

இத்தலம் திருநாவுக்கரசு நாயனாரின் ஐக்கியத் (முக்தி) தலம். இறைவன் அருளால் சுந்தரர் செங்கல்லைப் செம்பொன் கற்களாக மாற்றிப் பெற்ற தலம். முருக நாயனாரின் அவதாரத்தலம்.

இத்தலம் வேளாக்குறிச்சி ஆதீனத்தின் பரிபாலனத்தில் விளங்குகிறது.

துறவிகளால் மட்டுமன்றி ஆதீனங்கள் பாரம்பரிய மரபு வழி இல்லற ஆச்சார்யர்களின் வழிகாட்டுதலிலும் இயங்கின. இயங்கி வருகின்றன.

அவ்வாறு தந்தை பின் தனயன் என்று இல்லற மரபு ஆச்சார்யர்களை குருமகா சந்நிதானமாக பேணி வருவது பழைமையான வேளாக்குறிச்சி ஆதீனம்.

இந்த ஆதீனம் திருவாரூர் தியாகேசர் பேராலய நிர்வாகத்தில் பெரும் பங்கேற்பது. இதன் தலைமையம் குறித்த திருப்புகலூரில் தான் உள்ளது.

நீர்வேலி, ஊரெழு, ஆவரங்கால்,மாவிட்டபுரம் போன்ற யாழ்ப்பாணத்து ஊர்களில் வாழ்ந்த சிவாச்சார்யர்களில் பலரும் இந்த திருப்புகலூரில் சென்று சிவபூஜை எழுந்தருளச் செய்து வரும் மரபுடையவர்களாக விளங்கினர்.

அது போல, நீர்வேலியில் வாழ்ந்த பெரும் சம்ஸ்க்ருத அறிஞரான சிவ –சங்கர பண்டிதர் அவர்களும் திருப்புகலூரில் சென்று தம் சம்ஸ்கிருதப்புலமையை வளர்த்துக்கொண்டதாக குறிப்புகள் உள்ளன.

ஏனெனில் திருப்புகலூரில் ஒரு சிவாகம பாடசாலை பிரபலமாக 19 ஆம் நூற்றாண்டில் இருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

அவ்வாறு எம்முடன் தொடர்புகள் மிகுந்த இத்திருத்தல மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 05.06.2025 வைகாசி அத்த நாளில் நிகழவுள்ளது.

இத்தல மூலவர் அக்னீஸ்வரர் என்றே இப்போது பெரும்பாலும் குறிப்பிடப்படினும் அம்மூர்த்திக்கு, அக்னிக்கு சாபவிமோசனம் அருளியதால் அக்னீஸ்வரர், பாணசுரனுக்கு அருளியதால் கோணபிரான், மற்றும் சரண்யபுரீஸ்வரர் என மூன்று திருநாமங்கள் வழுங்கப்படுகின்றன.

அம்பாள் அருள்மிகு கருந்தார்குழலி என்று அழைக்கப்படுகிறாள். அவளது மறு பெயர் சூளிகாம்பாள்.

ஆயினும், யாழ்ப்பாணத்தில் இம்மூர்த்தியை ஆத்மார்த்த மூர்த்தியாகப் பூசித்த நம் முன்னோர் மரபாக 'சூளிகாம்பாள் சமேத சரண்யபுரீஸ்வர ஸ்வாமி' என்ற நாமத்திலேயே பூசிக்கிறார்கள்.

நீர்வேலி, ஆவரங்கால், மாவிட்டபுரம், ஊரெழு முதலிய ஊர்களில் வாழ்ந்த, வாழும் சிவாச்சார்ய குடும்பங்கள் பலவற்றில் சந்ததி உடையவராக இம்மூர்த்தியே இன்றும் விளங்குகிறார்.

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினுஞ்
சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.'

என்ற புகழ் பெற்ற பாடலுக்குரிய தலம் இது.

திருஞானசம்பந்தப் பெருமானும் இத்தல இறைவனைப் பாடிப் போற்றியிருக்கிறார்.

இத்தல இறைவியான சூளிகாம்பாள் ஏழைப் பெண்ணுக்கு மகப்பேறு (சூல்) பார்த்து அருளிய பெருந்தகையாள் எனக் குறிப்பிடப்படுகிறது.

திருப்புகலூர் அருகே உள்ள போலகம் என்ற கிராமத்தில் ஒரு ஏழைப் பெண் பிரசவ வலியால் வேதனைப்பட்டுள்ளார். அன்னை சூளிகாம்பாள் அப்பெண்ணின் தாயார் ரூபத்தில்



அங்குச் சென்று மகப்பேறு பார்த்தருளியுள்ளார்.

மறுநாள் அவரது தாய் ஊருக்குத் திரும்பிய போது, மகளுக்கு யார் பிரசவம் பார்த்தது என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. அப்போது, அந்தப் பெண்ணின் வீட்டிலிருந்து கோயில் வரை கிடந்த வெள்ளை சேலையின் துண்டுகள், மகப்பேறு பார்த்துச் சென்றது அம்பாள் தான் என்பதை அடையாளம் காட்டியுள்ளது.

இதனால், பரவசமடைந்த அப்பகுதி மக்கள் அம்பாளுக்கு மருத்துவ காணியாக ஒரு ஏக்கர் நிலத்தை வழுங்கியுள்ளனர். அந்த நிலத்தில் இருந்து கிடைக்கும் வருவாயைக்கொண்டே இன்றளவும் இத்தலத்து அம்பாளுக்கு இரவு நிவேதனம் நடைபெறுகிறது.

அம்பாள் மருத்துவச்சியாக வந்து மகப்பேறு பார்த்தவர் என்பதால், தினமும் சாயரட்சை பூஜையின் போது அம்பாளுக்கு வெள்ளை சாத்தி வழிபாடு நடத்தப்படுகிறது. இதுபோன்ற நிகழ்வு வேறு எந்தத் தலத்திலும் இல்லை.

அம்பாளின் திருவருளால் இப்பகுதியில் மகப்பேற்றுத் துன்பங்கள் இல்லை என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு எம்முடனும், எம் யாழ்ப்பாண மண்ணுடனும் நெருங்கிய தொடர்புடைய திருப்புகலூர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா நிகழும் வேளையில் சூளிகாம்பாள் சமேத சரண்யபுரீஸ்வரப் பெருமானின் திருவருள் எம்மோடு இருந்து வாழ்விக்கவும் பிரார்த்திப்போம்.

நமோ நமஸ்தே ஜகதீஸ்வராய
காருண்ய ரூபாய க்ருபாகராய
ஸ்ரீ ஸூளிகாம்பா ஹ்ருதி
சம்ஸ்திதாய
ரண்யபுரீ ய நம: வாய

**தி.மயூரகிரிக்குருக்கள்**




# வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்தில் கலை, கலாசார பண்பாட்டுப் பெருவிழா

வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்தில் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு பெருவிழா நேற்று (வியாழக்கிழமை) பாடசாலை அதிபர் சு.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிரதம விருந்தினர்களிற்கு மாலை அணிவித்து பாரம்பரிய முறைப்படி அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அத்துடன் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களான கிறீஸ் மரம் ஏறுதல், தலையணை சண்டை உட்பட பல்வேறு விளையாட்டுக்கள் இடம்பெற்றிருந்ததுடன், மாணவர்களிற்கான கைவிசேடங்களும் வழங்கப்பட்டதுடன் உற்பத்தி பொருட் சந்தையும் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாமன், வவுனியா வடக்கு கோட்டக் கல்வி அதிகாரி சசிகுமார் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். 100









# குறைபாடுகளுள்ள பஸ்ஸைச் செலுத்திய சாரதியின் அனுமதிப் பத்திரம் பறிமுதல்

## மோட்டர் போக்குவரத்து திணைக்களம் அதிரடி

போக்குவரத்து குறைபாடுகளை கொண்ட அரச பஸ் ஒன்றின் சாரதியின் அனுமதிப் பத்திரம் பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், பத்து நாள்களுக்குள் பஸ்ஸை சீரமைக்காவிடில் பஸ்ஸிற்கு நிரந்தர தடை உத்தரவு வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழில் இருந்து வவுனியா நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியாசாலைக்கு சொந்தமான பஸ்ஸின் சாரதிக்கே இவ்வாறு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் அரச தனியார் பஸ்கள் வவுனியா மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகளால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதுயாழில்இருந்துவவுனியாவந்தபலபஸ்களில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த பஸ்களின் சாரதிகளுக்கு பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், சில பஸ்களின் சாரதிகளுக்கு குற்ற பத்திரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

அத்துடன், வவுனியாசாலைக்கு சொந்தமான அரச பஸ் ஒன்றில்பல்வேறுகுறைபாடுகள்அவதானிக்கப்பட்டநிலையில் அதன் சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் போக்குவரத்து பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் தற்காலிக பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பஸ்ஸில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை எதிர்வரும் 10 நாள்களுக்குள் சரி செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சரி செய்யாத பட்சத்தில் பஸ்ஸின் சேவைக்கு நிரந்தர தடைஉத்தரவு வழங்கப்படும் என மோட்டர் போக்குவரத்து திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறைபாடுகளை நிவர்த்தி செய்யாமல் சேவையில் ஈடுபடுவது குற்றமாக கருதப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவுறுத்தியுள்ள நிலையில் குறித்த பஸ் நேற்றைய தினமும் சேவையில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. 100




# நுவரெலியா மாவட்டத்தில் 71 குடும்பங்கள் பாதிப்பு

(கேதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் 71 குடும்பங்களைச் சேர்ந்த 246 பேர் நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னக்கோன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 69 குடியிருப்புக்கள் பகுதியளவு சேதமடைந்துள்ளன எனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனவும் திருமதி தென்னக்கோன் தெரிவித்தார்.

பருவமழை தொடங்குவதால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை குறைக்க நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் நுவரெலியா மாவட்டத்தின் சில பகுதிகளில் நிலவும் காற்று மற்றும் மழையுடன் கூடிய கடுமையான மூடுபனியும் நிலவுவதால் வாகன சாரதிகள் வாகனங்களை செலுத்தும்போதும் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதும் கவனமாக செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

# சம்மாந்துறை பஸ் திருத்தகத்துக்கு ஆதம்பாவா எம்.பி. களப் பயணம்

## நிலவும் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வு

(ஸாகிர்)

சம்மாந்துறையிலுள்ள இலங்கை போக்குவரத்து பஸ்களை திருத்தும் அரங்குக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா விஜயத்தை மேற்கொண்டு, அங்குநிலவும்குறைபாடுகள் தொடர்பில் அதில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.



அழிவடைந்து காணப்படும் இவ்விடத்தை துரிதகதியில் உயிர்ப்பிப்பதற்கானமுயற்சியாக தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் இக்கள விஜயம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# மன்னார் வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டுவந்து மாகாண அதிகாரங்கள் மீளப்பெறப்படுவதை அனுமதிக்கமுடியாது

## சத்தியலிங்கம் எம்.பி தெரிவிப்பு

மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவதானது மாகாண சபையின் அதிகாரத்தை மத்திய அரசுக்கு மீளகையளிப்பதாக அமையும் என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்இவ்வாறானதீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (வியாழக்கிழமை) கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் உரிமைப்போராட்டத்திற்குகிடைத்தமுதலாவது அரசியல் யாப்பு ரீதியான தீர்வே மாகாண சபை முறைமையாகும். தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வாக மாகாண சபை முறைமை அமையாது விடினும் ஓரளவுக்கேனும் தம்மைத் தாமே ஆளும் அதிகாரம் மாகாணசபை சட்டத்தில் உள்ளது.

மாகாண சபையிடம் மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்வதற்கான போதுமான நிதி வளம் இல்லையென்பதால் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்வதாக காரணம்முன்வைக்கப்படுகின்றது.மாகாணசபை சுயமாக இயங்கக் கூடிய வகையில் அதனை பலப்படுத்துவது மத்திய அரசின் கடமையாகும்.

இதுவரை மாகாணத்திற்கான நிதியை திரட்டக் கூடிய வகையிலான எந்தவிதமான விசேட திட்டங்களையும் மத்தியில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் செய்யவில்லை. மாறாக வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டு மாகாணத்திற்கான அந்நிய செலாவணியை ஈட்டக் கூடிய வகையிலான திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும் அதனை நடைமுறைப்படுத்தவதற்கு மத்திய அரசு மறைமுகமாக பல தடைகளைப் போட்டது.

மண்ணார்மாவட்டபொதுவைத்தியசாலையில் பாரியவளப்பற்றாக்குறைஉள்ளதுஎன்பதுமறுக்க முடியாத உண்மையாகும். ஆனாலும் அதனை சீர்செய்வதற்காக வைத்தியசாலை நிர்வாகத்தை மத்திய அரசின் கீழ் கொண்டுவருதென்பது தீர்வாக அமையாது.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பாக சுகாதாரம், கல்வி, விவசாயம் போன்றதுறைகள் மாகாண சபையின் நேரடி நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்றன. ஏற்கனவே தேசிய பாடசாலைகள் என்ற போர்வையில் மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வந்த முன்னணிப் பாடசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் ஆபத்தினை அறியாதவர்களாய் எம்மவர்களும் துணையேபோயுள்ளனர் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

மாகாண வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டாலும் சுகாதார துறைக்கான அபிவிருத்திக்கு பெரும்பாலும் வெளிநாட்டு நிதியே பயன்படுத்துப்படுகின்றது. சுகாதாரத்துறையைபொறுத்தவரைபன்னாட்டு



நிதி வழங்கும் நிறுவனங்களான ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி என்பன தொடர்ச்சியாக நிதி வழங்கி வருகின்றன. மத்திய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் நிதியை மாகாண அமைச்சினூடாக வழங்குவதன் மூலம் மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்ய முடியும்.

கடந்த காலங்களில் மாகாண சுகாதார அமைச்சராக நான் இருந்த போது மத்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் நெதர்லாந்து அரசாங்கத்தின் பாரிய நிதி பங்களிப்புடனான சுகாதார அபிவிருத்தி திட்டமொன்றினை வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தியிருந்தோம். ஆகவே மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்வதற்கு அதனை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவது ஒரு போதும் தீர்வாக அமையாது. மாறாக இருக்கும் அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் கையகப்படுத்தவதற்கு நாமே வாய்ப்பினை வழங்கியதாக அமைந்துவிடும். கடந்த அரசாங்கங்கள் செய்த தவறை இந்த அரசாங்கமும் தொடர்கின்றதாக என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. - என்றார். 100


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு நடமாடும் கல்விச் சேவை ஆரம்பம்



மட்டக்களப்புமாவட்டம் பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனைக்குட்பட்ட அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளான ஆனைகட்டியவெளி நாமகள் வித்தியாலயம், மற்றும் காக்காச்சி வட்டை விஷ்ணு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் பட்டிருப்பு வலயக்கல்வி பணிமணையின் ஏற்பாட்டில் நடமாடும் விஞ்ஞான, கணனி ஆய்வு கூட கல்விச் சேவை முதன் முதலாக வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையில் கடந்த 15 வருடங்களாக இனி பாவனைக்கு பயன்படுத்த முடியாது என கைவிடப்பட்டிருந்த நடமாடும் விஞ்ஞான கணனி ஆய்வு கூட வாகனம் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் முயற்சியினால் மீள் இயங்கு நிலைக்கு கொண்டு வரப்பட்டு மாணவர்களின் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்காக சேவைக்கு தற்போது விடப்பட்டுள்ளது.

அந்த வகையில் போரதீவுப்பற்று கல்விக் கோட்டத்திலுள்ள காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலயம் மற்றும் ஆனைகட்டியவெளி நாமகள் வித்தியாலயம் ஆகியவற்றிலுள்ள மாணவர்களுக்கு இந்த நடமாடும் கல்விச் சேவை அறிமுகப்படுத்துப்பட்டு செயன் முறை மூலம் விஞ்ஞான, கணிணி பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் , அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையினால் 15 வருடங்களுக்குப் பின் நடைபெறும் இந்த நடமாடும் கல்விச் சேவையினை பெற்றோர்கள், கல்வியியலாளர்கள் பாராட்டி வருகின்றனர்.



# திருக்கோவிலில் சிறப்பாக நடைபெற்ற அகில இலங்கை தமிழ் தினப் போட்டி

(சகாதேவராஜா)



அகில இலங்கை வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியானது அம்பாறை மாவட்டம் திருக்கோவில் கல்வி வலயத்திற்குட்பட்ட தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் மிக்சிறப்பாக புதன்கிழமை இடம்பெற்றது.

திருக்கோவில்வலயக்கல்விப்பணிப்பாளர் இரா .உதயகுமார் தலைமையில் தமிழ்மொழித்தினபண்பாட்டுஊர்வலத்துடன் ஆரம்பமாகியது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உள்ளிட்ட அதிதிகள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

பின்னர் தேசியக் மற்றும் வலயக்கொடிகள் ஏற்றப்பட்டதுடன் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் மற்றும் மாணவிகளின் வரவேற்பு நடனமும் தமிழ் தாய்வாழ்த்து, தமிழ் மொழி வாழ்த்து தமிழ் மொழி தின வாழ்த்து என்பன இடம்பெற்றன.

திருக்கோவில் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

2024 ஆண்டில் தேசிய ரீதியில் வெற்றி பெற்ற மூன்று மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

மேலும் இதில் பங்கு பற்றி வெற்றி பெற்று மாவட்ட மட்டத்திற்கு தெரிவாகிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வலயக் கல்விப்பணிப்பாளரால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.05.2025இல் வெளியிடப்பெற்றது